# தப்லீகு என்றால் என்ன? What is Tableegh?

*தொகுத்தவர்:* **அல்ஹாஜ் மௌலானா மௌலவி பாழில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி, ஸித்தீக்கி, காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்கள்**

**பதிப்புரை**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே! கருணையும் ஈடேற்றும் ஈருலக இரட்சகர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களை உகந்தவர்கள் மீதும் எனறென்றும் உண்டாவதாக!

மறைந்த மாமேதை மகான் எங்கள் குருநாதர் அல் ஆரிபுபில்லாஹ் அல் முஹிப்புர்ரஸூல் சங்கைகுரிய நாயகம், மௌலானா மௌலவி பாழில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி,ஸித்தீக்கி காஹிரி கத்தஸ்ல்லாஹு ஸிர்ரஹுல் அஜீல் அவர்கள் தொகுத்த ஞான சம்பந்தமான நூற்களும், கெட்ட கொள்கைக்காரர்களான தப்லீக்ஜமாத், ஜமாதஅத்தே இஸ்லாமி போன்ற கூட்டங்களுக்கு மறுப்பான நூற்களும் பலவற்றை வெளியிட்டுள்ளோம், அல்ஹம்துலில்லாஹ்.

அவற்றில் ' தப்லீக்கு எனறால் என்ன?' என்ற இந்த நூலும் ஒன்று. இந் நூலை இதுவரை நான்கு பதிப்புகள் வெளியிட்டுள்ளோம். மக்களின் வரவேற்பை அதிகமாக பெற்ற இந்நூலே ஐந்தாம் பதிப்பாக இதோ வெளிட்டுள்ளோம், மீண்டும் இந்நூலை வரவேற்று வாங்கிப் படித்து பயன் பெறுவதுடன் எங்களின் சீரிய முயற்சிகளுக்கு நல்லாதரவு தரும்படி வேண்டுகிறோம்.

இதுபோன்று இன்னும் பல எங்கள் குருநாதர் ஸூபி ஹழ்ரத் கத்ஸல்லல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் அரிய நூற்களை வெளியிட அல்லாஹ் நல்லருள் புரிவனாக. ஆமீன். வஸ்ஸலாம்.

இங்ஙனம்

25-2-91 **ஹிஸ்புல்லாஹ்**

**சபை**

ஸூபி மன்ஸில், குத்துக்கல் தெரு

காயல்பட்டினம்.

**தப்லீகு என்றால் என்ன?**

முபஸ்மிலன் முஹம்திலன் முஸல்லியன் முஸல்லிமா சகோதரர்களே!

வஹ்ஹாபியர்கள் பொதுமக்களை ஏமாற்றி வழிகொடுத்து தங்கள் கூட்டத்தில் சேர்த்து வஹ்ஹாபிகளாக்க வேண்டுமென்ற நோக்கத்தில் கண்ணுங் கருத்துமாக வேயிருக்கிறார்கள். அதற்காக புதிய புதிய திட்டங்கள் கொண்ட புதிது புதிதான இயக்கங்களையும் உண்டாக்கிக் கொண்டே வருகிறார்கள். இவர்கள் சமீப காலத்தில் '**தப்லீகு ஜமா அத்து**' '**ஜமா அத்தே இஸ்லாமி**' என்ற போர்வைகளையும் போர்த்திக் கொண்டு வெளிவந்திருக்கிறார்கள். இக்கூட்டம் எந்த வேஷத்தில் வந்து தோன்றினாலும், நம் ஸுன்னத்து வல்ஜமா அத்து உலமாக்களாகிய மேதைகள் இவர்களின் போலி முகமூடியைக் கிழிதெறிந்து இவர்களின் அவலட்சண வஹ்ஹாபிய ரூபத்தை மக்களுக்கு வெளியாக்கிக் காட்டி, எச்சரிக்கை செய்து கொண்டேதானிருக்கிறார்கள். இவர்களைப் பற்றி நம் தென்னாட்டு மக்கள் சுலபமாக விளங்கி, ஜாக்கிரதையாக இருப்பதற்காக முதலவதாக 'தப்லீகு ஜமா அத்து' என்ற முகமூடி அணிந்த வேஷதாரி யார்? என்பதை விளக்குவோம் (மௌதூதி சாஹிபும் அவரது ஜமா அத்தே இஸ்லாமி வஹ்ஹாபிகளின் கொள்கைகளை விளக்கி சுருக்கமானதோர் புத்தகம் 'இள்ஹாறுல் ஹக்கு' எனும் நாமத்தோடு எழுதியுள்ளளோம். (இந்நூல் வெளி வந்துள்ளது) 'இன்ஷா அல்லாஹ்' கூடிய சீக்கிரம் வஹ்ஹாபிகளின் கொள்கைகளையும் அதற்குத் தக்க ஆதாரத்தோடு மறுப்பும் எழுதி விரிவானதோர் நூல் '**திப்யானுல் ஹக்கு**' எனும் நாமத்தோடு வெளியாக்க நாடியிருக்கிறோம். அல்லாஹ் நல்லருள் புரிவானாக!. ஆமீன்.

தற்சமயம் எம்மிடம் இந்த இயக்கத்தின் உண்மைப் போக்கை விளக்கும் மூன்று நூல்களிருக்கின்றன. அவைகளாவன: (1) 'மகாதிபு ஹளரத்து மவுலானா வாஹ் முஹம்மது இல்யாஸ்' (முஹம்மது இல்யாஸின் கடிதங்கள்) இது இந்த இயக்கத்தின் விஷேசபிரசாரகர் மவுலவி அபுல் ஹஸன் அலி நத்வி என்பவரால் தொகுக்கப்பட்டது. (2) 'மவுலானா முஹம்மது இல்யாஸ்அவர் உன்கீ தீனி தாவது' (இல்யாஸும் அவரின் மார்க்க அழைப்பும்) இதுவும் அபுல்ஹஸன் நத்வியாலேயே எழுதப்பட்டது. இதில் இல்யாஸின் ஜீவிய சரித்திரமும, அவரின் வார்த்தைகளும், கடிதங்களும் அடங்கி இருக்கின்றன. (3) 'மல்பூளாது ஹலரத்து மௌலானா முஹம்மது இல்லயாஸ்'' (இல்லாஸின் வார்த்தைகள்) இது அவரின் விசேச மாணாக்கரும், இந்த இயக்கத்தின் சொந்தப் பிரச்சாகருமான மவுலவி மன்ளூர் நுஃமானி என்பவரால் ஒன்று சேர்க்கப்பட்டது. இந்த மூன்று நூற்களிலும் பார்க்கும் போது இந்த இயக்கத்தில் முழுக்க முழுக்க தேவுபந்திகளும், அவர்களின் கொள்கைக்காரர்களுமேதான் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஸுன்னி மவுலவியுடைய பெயர்கூட எங்கும் காணப்படவில்லை. எனவே இஃது ஸுன்னத்து ஜமாஅத்துகளுக்கு எதிராகவே உண்டாக்கப்பட்டதோர் இயக்கமென்றும், ஸுன்னத்து ஜமா அத்து சாமான்ய மக்களை ஏமாற்றி வஹ்ஹாபிகளாக ஆக்குவதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

ஒருவரின் கொள்கை, நோக்கம், அபிலாசை, மனோஎழுச்சி இவைகள் அவரின் ஜீவிய சரித்திரத்தைக் கொண்டு வெளியாகுவதை விடவும் அவரின் வார்த்தைகள் கடிதங்களைக்

கொண்டே தான் தெளிவாகவும் ஐயமில்லாமலும் விளங்கவரும். அபுல்ஹஸன் நத்வி தான் தொகுத்த 'மகாதிபு' எனும் நூல் 3-ம் பக்கத்தில் முக உரையில் பொதுவாகப் பெரியார்களின் கடிதங்களைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார் :- இந்தத் தொகுப்பு (லிகிதங்கள்) அவர்களின் சுத்தமான நிலைமைகளையும், கொள்கைகளையும் இன்னும் அவர்களின் இயக்கத்தின் அசல் நோக்கத்தையும் தெரிந்து கொள்வதற்கு அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தின் முன்னால் (இதையே) மிகவும் உறுதியான ஆதாரமான காரணமாக கருதப்படுகிறது. ஏனென்றால், ஜீவிய சரித்திரம் மற்ற மனிதார்களால் தயாரிக்கப்பட்டவைகளாகும். அவைகளில் அவைகளைக் கோர்வை செய்தவர்களின் அனுபவத்திற்கும் மனோ எழுச்சிக்கும் நன்றாக இடமுண்டு;.' இன்னும் 4-ம் பக்கத்தில் இல்யாஸுடைய லிகிதங்களைப்பற்றி குறிப்பாக எழுதுகிறார், இஃது அவரின் (இல்யாஸின்) மனோலயம் எமுச்சி இன்னும் அவரின் மார்க்க அழைப்பு, தெண்டிப்பின் அந்தரங்க நோக்கம் இவைகளை தெரிந்து கொள்வதற்கு எல்லாத்தையும் விட நம்பிக்கையான ஆதாரமாகும்.' இனி நாம் இந்த இயக்கத்தைப் பற்றி இந்த மூன்று நூல்களைக் கொண்டே ஆராய்வோம்.

முதலாவது, இங்கு தப்லீகு என்ற பதத்தின் பொருளைப் பற்றி ஆராய்வோம்.

**தப்லீகு என்றால் பொருள் என்ன?**

தப்லீகு என்பது **'புலூக்'** என்ற தன்வினைச் சொல்லிலிருந்து எடுக்கப்பட்ட பிறவினைச் சொல்லாகும். 'புலூக்' என்றால் எட்டுகிறது, சேர்கிறது என்றும் 'தப்லீகு' என்றால் **எட்டிவைப்பது, சேர்த்து வைப்பது** என்றும் பொருள். ஒரு விசயத்தை அல்லது ஒரு கட்டளையை ஒருவரிடம் எட்டி வைப்பதற்கு, அது ஏற்கனவே அவருக்கு எட்டாதிருக்க வேண்டும். ஏற்கனவே எட்டியிருந்த கட்டளையை அல்லது விஷயத்தைத் திரும்பச் சொல்வதற்கும் (1) ஞாபகப்படுத்துவது (2) விவரிப்பது (3) அதைப்பற்றி ஆசை ஊட்டுவது (4) அச்சமூட்டுவது (5) உபதேசிப்பது என்று தான் சொல்லப்படுமேயல்லாது தப்லீகு (எட்டிவைப்பது) என்று சொல்லப்படாது. இதற்கு அரபியில் முறையே, (1) ததுகீர் (2) பயான் (3) தர்கீபு (4) தஹ்தீறு (5) வஃளு என்று சொல்லப்படும்.

நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்) மக்களுக்கு தெரிந்த பழைய ஷரீஅத்தையே வைத்து, அதன்படி அமல் செய்ய வேண்டுமென்று மக்களுக்கு போதிக்கிறவர்கள். றஸூல்மார்களோ (தூதர்களோ) மக்களுக்கு தெரியாத புதிய ஷரீஅத்தை மக்களுக்கு எட்டிவைத்து போதிக்கிறவர்கள். இதனாலேயே குர் ஆன் ஷரீபில் 'றஸூலே, உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டுள்ளவைகளை (பூராவையும்) எட்டிவைப்பீராக! நீர்; அவ்வாறு (பூராவையும் எட்ட) செய்யவில்லையானால் உமக்கு அருளப்பட்ட தூதை (ஒன்றையுமே) நீர் எட்டிவைக்காதவரே போல்' (10:5) என்ற வசனத்தில் **'யாஅய்யுஹற்றஸூலு!'** (தூதரே) என்று அழைத்து, எட்டி வைக்கும் படி சொல்லப்பட்டதேயன்றி, **'யா அய்யுஹன்னபிய்யு!'** (தீர்க்கத்திரிசியே) எட்டி வைப்பீராக! என்று குர் ஆனில் எங்குமே வரவில்லை. மேலும் ஹதீது ஷரீபில்: ஓரெயொரு கட்டளையையாயினும் சரியே என் சார்பில்

எட்டி வையுங்கள். இஸ்ரவேலர்களுடைய சமாச்சாரங்களைச் சொல்லிக்காட்டுங்கள். அ∴து குற்றமில்லை. (ஆனால்) எவராவது என்பேரில் வேண்டுமென்று பொய் சொல்வானேயானால் அவன் தனது இருப்பிடத்தை நரகத்திலாக்கிக் கொள்ளவும் - (புகாரி) இன்னும் 'எம்மில் நின்றும் ஒரு விசயத்தைக் கேட்டுக் கேட்டது போல் அதை எட்டச்செய்தவனை அல்லாஹ் அழாக்கிவைப்பானாக' (திருமிதி) என்று வந்த ஹதீதுகளில் றஸூல் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுடைய சொற்செயல்கள் என்று றாவிகள் மூலம் அவர்கள் வரையிலும் சேரக்கூடிய சுத்தமான ஹதீதுகளை கூட்டாமல் குறைக்காமல் அப்படியே எட்டி வைக்கிறவருக்கு ஆசீர்வாதம் கூறியும் றஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பேரில் வேண்டுமென்று பொய் சொல்கிறவனுக்குரிய தண்டனைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே எட்டிவைப்பது என்பது விளக்கப்படவில்லை. 'எட்டிவையுங்கள்' என்ற பதத்திலிருந்தே **எட்டாதவர்களுக்கு எட்டிவைப்பது** என்பது சுலபமாக விளங்கும். இன்னுமொரு ஹதீதில்: 'இங்கு வந்திருக்கிறவர்கள் வராதவர்களுக்கு எட்டிவையுங்கள்' என்று, வராதவர்களுக்கு எட்டி வைக்கும்படி தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ஏன் வராதவர்களுக்கு விசயம் தெரியாதே. ஆகவே, தெரியாதவர்களிடம் ஒரு விஷயத்தை அல்லது ஒரு கட்டளையை சேர்த்து வைப்பதற்கே தான் எட்டிவைப்பது என்று சொல்லப்படுமென்று விளங்க வருகிறது.

மேலே கூறிய ஹதீதுகளின்படி ஸஹாபாக்கள் காலம் முதல் இது காலம் வரையிலும் ஒருவரில்லாது போனால் ஒருவராவது றஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொண்டு வந்த தீனுடைய கருமத்தைத் தெரியாத மக்களுக்கு எட்டி வைத்துத்தான் வந்திருக்கிறார்கள். இன்னும் எட்டி வைத்துத்தான் வருகிறார்கள். அதாவது: குர் ஆன் ஷரீபை ஒன்று சேர்த்தார்கள.; அதற்கு இ∴றாபு வைத்தார்கள். அதை அச்சிட்டு உலகெங்கும் பரப்பினார்கள.; அதில் ஸஹீஹானது இன்னது, ளஈபானது இன்னது எனக்காட்டினார்கள். அதற்கு விரிவுரை எழுதினார்கள். பிக்ஹு மஸ்அலாக்களைத் தேடி எடுத்து நூல் வடிவமாக வெளியாக்கினார்கள். வழிகெட்ட கூட்டத்தார்களுடைய கெட்ட கொள்கைகளை விளக்கி காட்டி மறுப்புக் கொடுத்தார்கள். இவர்களெல்லாம் மக்களுக்கு தப்லீகு – எட்டத்தான் செய்தார்கள். இவ்விதம் செய்யாதிருந்தால் இன்று நமக்கு மார்க்கம் இன்னதுதானென்றே தெரியாது போய்விடும். அவர்கள் வேலைகளெல்லாம் எட்டாவர்களுக்கு எட்டச் செய்வதாகவே இருந்தது. அவர்கள் தங்களுக்கு 'தப்லீகு ஜமா அத்தார்கள்' (எட்டி வைக்கும் குழுவினர்கள்) என்று பெயர் வைத்து கொள்ளாது போனாலும், அவர்கள் அந்த வேலையைச் செய்தார்கள். எட்டவைத்தார்கள், எட்டவைத்துக் கொண்டே தானிருக்கிறார்கள். ஆனால் இன்று 'தப்லீகு ஜமா அத்து' என்று தங்களுக்கு பெயர் சொல்லி கொள்கிறார்கள், உங்கள் வேலை என்னவென்று கேட்டால் 'முஸ்லீம்களைத் தொழுகைக்கு அழைப்பது தான் எங்கள் வேலை' என்று சொல்கிறார்கள். ஐங்காலத் தொழுகை தங்கள் கடமை எனத் தெரிந்த மக்களிடம் 'தொழுகை அவர்கள் பேரில் கடமை' என்பதையா எட்டி வைக்கிறார்கள். அதுதான் அவர்களிடம் ஏற்கனவே எட்டி இருக்கிறதே! அவர்களுக்கு ஐங்காலத் தொழுகை கடமை என்பது தெரியத்தான் செய்யும்! அவர்கள் தொழுகாமலிருந்தால், அவர்களை தொழுக வரும்படி கூப்பிடுவதற்கு 'தொழுகைக்கு

அழைப்பது' என்றல்லவா சொல்ல வேண்டும். தப்லீகு (எட்டி வைப்பது) என்று சொல்ல முடியுமா?

**தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் யார்?**

தப்லீகு ஜமா அத்தின் ஸ்தாபகர் மவுலவி இல்யாஸ். இவர் ஹிஜ்ரி 1303-ல் காந்திலா என்னும் ஊரில் பிறந்தார். இவர் இஸ்மாயிலின் மகன், அவர் குலாம் ஹுஸைனின் மகன் அவர் ஹகீம் கரீம் பக்ஷின் மகன். அவர் ஹகீம் குலாம் முஹியத்தீன் மகன் அவர் முஹம்மது ஸாஜிதின் மகனாவார். (தீனிதாவது பக்கம் 34-39)

**இல்யாஸின் கொள்கை என்ன? யாரைத் துயர்ந்தவர்?**

இந்த விஷயத்தைப்பற்றி இல்யாஸின் வாயாலும், அவரின் பிரதான சீடரான அபுல் ஹஸன் நத்வியின் வாசகங்களிலிருந்தும் விளங்கிக் கொள்ளுங்கள். தீனி தாவது பக்கம் 43ல் வருகிறது: ஹிஜ்ரி 1314 அல்லது 1315 ஆரம்பத்தில் (இல்யாஸ்) கொங்கோஹ் என்ற ஊருக்கு வந்தார். ஹளரத் மவுலாளனா றசீது அஹமது சாஹிபுவின் சகவாசமும், அவர்களின் மஜ்லிஸுகளில் வீற்றிருக்கும் பாக்கியமும் மவுலானா இல்யாஸுக்கு இரவும் பகலும் கிடைத்தது.' இன்னும் அதே நூல் 44ம் பக்கத்தில் 'மவுலானா இல்யாஸ் கொங்கோஹி வந்த சமயம் அவர் பத்து பதினொரு வயது சிறுவராக இருந்தார். ஹஜ்ரி 1323ல் ஹளரத் மௌலானா கொங்கோஹி வபாத்தான சமயத்தில் இல்யாஸ் அவர்கள் வாலிபராக இருந்தார் எனவே பத்து வருடங்கள் மவுலானா அவர்களின் சகவாகத்தில் சென்று இருக்கிறது' இன்னும் அதே நூல் 44ம் பக்கத்தில் 'மவுலானா கொங்கோஹி, மவுலானா இல்யாஸ் அவர்களின் விசேச தன்மைகளைப் பார்த்து அவர்களின் விருப்பம், தேட்டத்திற்கிணங்க அவர்களிடம் பை அத்து (வாக்குறுதி) வாங்கி (தனது முரீதாக்கி) கொண்டார்கள்' இன்னும் அதே நூல் அதே பக்கத்தில் வருகிறது 'ஹளரத் மவுலானா றஷீது அஹ்மது அவர்களைக் காணாத பட்சம் மன நிம்மதியே உண்டாகிறதில்லை என்ற அளவுக்கு அவர்கள் மீது இல்யாஸ் அவர்களுக்கு மனப்பற்றுதல் உண்டாகி இருந்தது. அடிக்கடி இரவில் தூங்கத்திலுங் கூட அவர்களின் ஞாபகம் உண்டாகி, தூக்கத்திலிருந்து விழித்து அவர்களுடைய முகத்தைப் பார்க்க வேண்டி அவர்களிடம் சென்று தரிவித் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்' இன்னும் அதே நூல் 47ம் பக்கத்தில் 'ஹளரத் மவுலானா றஷீது அஹ்மது சாஹிபு வபத்தான பின்பு (இல்யாஸ் அவர்கள் செய்குல் ஹிந்துமஹ்முது ஹஸன் சாகிபு இடம் யோசனை கேட்டார்கள். அவர்கள் கலீல்அஹ்மது சாகிபு இடம் போகும்படி சொன்னார்கள். ஆதன்படி அவர்கள் மவுலானா கலீல் அஹ்மது ஸஹாரன் பூரி (அம்பேட்டி)யுடன் தங்கள் தொடர்பை வைத்துக் கொண்டார்கள்' இன்னும் அதே நூல் 49ம் பக்கத்தில் வருகிறது. 'மவுலானா கொங்கோஹி அவர்களின் இதர கலீபாக்களுடன் விசுவாசம், சகவாசம், கல்விகற்றல் இத்தகைய துடர்பு (இல்யாஸ்) அவர்களுக்கு நிரந்தரமாக இருந்து கொண்டே வந்தது. ஷாஹ் அப்துற் றஹீம் சாஹிபு றாயபூரி, மவுலானா மஹ்மூது ஹஸன் சாகிபு தேவுபந்தி, மவுலான அஷ்ரப் அலிதானவி இவர்களோடு இல்யாஸ் அவர்களுக்கு எத்தகைய துடர்பு இருந்ததென்றால், என்னுடைய உடலிலும், உயிரிலும் குடிகொண்டுவிட்டார்கள். என்று (இல்யாஸ்) அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்கும் மவுலானாவின் விசேசத் தன்மையின் காரணமாக இவர்கள் பால் தனிப்பட்ட விசேச அன்பும் அலாதியான கவனமும் இருந்து வந்தது.

**தொழுகைக்கு அழைப்பதற்கு தப்லீகு என்று சொல்லலாமா?**

முஸ்லிம்கள் பேரில் ஐங்காலத் தொழுகை கடமை என்பதும், தொழுகை இஸ்லாததின் ஐந்து கடமைகளிலொன்று என்பதுவும் முஸ்லிம் சிறுவர்முதல் எல்லோர்களுக்கும் தெரியவே செய்யும், ஆனால் பொழுது போக்கினால் சிலரோ பலரோ தொழாமல் இருக்கலாம். இவர்களைத் தொழும்படி சொல்வதற்கு தொழுகைக்கு அழைப்பது நல்வழியில் அழைப்பதும் நேர்வழிகாட்டுவதும் உபதேசிப்பதும் ஏவல் விலக்கல் செய்வது போன்ற பதங்களைச் சொல்லலாமே தவிர இதற்கு தப்லீகு எட்டி வைப்பது என்று சொல்வது பொருந்தாது.

**தப்லீகு ஜமா அத்தின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பதுவா?**

தப்லீகு ஜமாஅத்தின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பதல்ல. தப்லீகு என்ற பதத்தின் பொருளைத் தெரிந்திருப்பீர்கள் எட்டாததையே – தான் எட்டி வைக்க முடியுமேயல்லாது எட்டியதை எட்டி வைப்பது (முஹால்) அசம்பாவிதமாகும். தொழுகை இஸ்லாத்தின் ஐந்து கடமைகளிலொன்று என்பது சர்வசாதாரணமாக முஸ்லீம் சிறுவர்களுக்குக் கூட தெரியும். முஸ்லீம்களைத் தொழும்படி சொல்வதற்கு தப்லீகு-எட்டி வைப்பது என்று மவுலவி என்ற ஸனது பெற்ற இல்யாஸ் எப்படி சொல்வார்?, ஒரு போதும் சொல்லவே மாட்டார். இதோ அவர் சொல்வதை பாருங்கள். 'கலிமாவையும் தொழுகையையும் சரியாகச் சொல்லவும், செய்யவும் வைப்பது இந்த இயக்கத்தின் கருத்தல்ல', (மக்தூபாத் பக்கம் 122) மேலும் அதுதான் கருத்தென தவறாக நம்பி வேலை செய்யும் தப்லீகு ஜமா அத்தின் செயலாளர்கள் பேரில் வருத்தமாகவும் கடமையாகவும் சொல்கிறார்;. 'இரண்டு கருமங்கள் இருக்கின்றன. ஒன்று நடவாமலிருப்பது அவசியமானது. அதை (இவர்கள்) செய்கிறார்கள். மற்றொன்று நடப்பது அவசியமானது அதை (இவர்கள்) செய்கிறார்கள் இல்லை. முந்திய கருமம் கலிமா தொழுகையைச் சரியாகச் செய்ய வைப்பது (இதை இவர்கள்) செய்கிறதென்றாலுங்கூட (இது) இந்த இயக்கத்தின் அசல் நோக்கத்தைப் போன்றது என்ற தோரணையில் செய்கிறார்கள். எதார்த்தமாமோ இது (இந்த இயக்கத்தின்) நோக்கமல்ல' (மக்தூபாத் பக்கம் 122) இன்னும் மவுலவி இல்யாஸின் கருமத்தை மக்கள் விளங்கிக் கொள்ளாததைப் பற்றி வருத்தமாகவும் தனது கருத்து அதுவல்லவென்றும் சத்தியம் செய்து தனது அன்பரிடம் சொல்கிறார் பாருங்கள், 'ஒரு சமயம் தனது அன்பர் மவுலவி ளஹீருல் ஹசன்சாகிபு எம்.ஏ.அலிகார் இவர் ஒரு விசால ஆராய்ச்சியாளரான அறிஞர். இவரிடம் இல்யாஸ் சொல்கிறார் 'ளஹீருல் ஹஸன்! என்னுடைய கருத்தை ஒருவரும் விளக்கிக் கொள்கிறார்களில்லை. ஜனங்கள் நினைத்துக் கொள்கிறார்கள் இது தொழுகையைப்பற்றி (ஏவக்கூடிய) இயக்கமென்று நான் சத்தியமாக சொல்கிறேன். இது ஒரு போதும் தொழுகையை பற்றி ஏவக்கூடிய இயக்கமில்லை' (தீனி தாவது பக்கம் 234)

www.sufimanzil.org

**இந்த இயக்கத்திற்கு தப்லீகு ஜமா அத்து என்று பெயர் வைத்தது சரிதானா?**

மவுலவி இல்யாஸ் தனது தப்லீகின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பதுவல்ல என்று சத்தியம் செய்து சொல்லிவிட்டு இறுதியாக மிகவும் வருத்தத்தோடு தனது நோக்கம் இன்னதுதான் என்று தனது அன்பரிடம் பின்வருமாறு கூறுகிறார். 'ஒரு நாள் பெருங்கை சேதத்தோடும் கவலையோடும் (இல்யாஸ்) சொன்னார். ஹஹீருல் ஹஸன்! (எனது நோக்கம்) ஒரு புதிய கூட்டத்தை உண்டாக்குவதாகும்' (தீனிதாவது பக்கம் 205) சகோதரர்களே! ஒரு கூட்டம், ஒரு சமுதாயம் என்று ஒரே கொள்கையைப் பின்பற்றிவர்களுக்கே சொல்லப்படும். 'யூதர்கள் 71 கூட்டமாகவும், நஸாராக்கள் 72 கூட்டமாகவும் பிரிந்தார்கள் எனது உம்மத்துக்கள் 73 கூட்டமாகப் பிரிவார்கள் ஒரு கூட்டத்தை தவிர மற்றதெல்லாம் நகரவாதிகள்' என்று எம்பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திருவாய் மலந்தருளிய போது ஸஹாபாக்கள் 'அந்த ஒரு கூட்டர் யார்? எனக் கேட்டதற்கு 'நானும் எனது ஸஹாபாக்களும் எந்தக் கொள்கையில் இருக்கிறோமோ அந்த கொள்கையில் இருப்பவர்கள்' என்று அருளப்பட்டக் கூட்டமும் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் (ஸுன்னத்தையும்) வழியையும், அவர்களின் அருமைத் தோழர்களின் வழியையும் பின்பற்றி நடக்கும் பழைய கூட்டமுமான ஸுன்னத்து வல்ஜமா அத்து கூட்டமாகிய நம்மில் ஒரு புதிய கூட்டத்தை உண்டாக்குவது என்றால் எமக்கு தொன்று தொட்டு ஸஹாபாக்களிலிருந்து கிடைத்து வந்த எமது பழைய கொள்கையாகிய சுன்னத் வல் ஜமாஅத்து கொள்கைக்கு புறம்பான புதியதோர் கொள்கையை எம்மிடம் புகுத்தி வைத்து – சேர்த்து வைத்து நாம் அந்தப் புதிய கொள்கையை எம்மிடம் பின்பற்றினோமேயோனால், நாம் புதியதோர் கூட்டமாக ஆகுவோம். அல்லது எம்மிலிருந்து அந்தப்புதிய கொள்கையை ஒப்புக்கொண்டவர்கள் எம்மை விட்டு வேற புதியதோர் கூட்டமாக ஆகுவார்கள். எனவே மவுலவி இல்யாஸின் நோக்கம் எங்களில் எங்களின் ஸுன்னத்து வல்ஜமாஅத்து கொள்கைக்கு மாற்றமான புதிய கொள்கையை சேர்த்து வைத்து, எங்களில் பிளவையுண்டாக்கி எங்களில் புதியதோர் கூட்டத்தை உண்டாக்குவதேயாகும். எங்களுக்கு எங்கள் கொள்கைக்கு மாற்றமான பதிய கொள்கை தெரியவே தெரியாது. ஆகவே, எங்களுக்குத் தெரியாத எங்களிடம் இது வரையும் வந்து சேராத கொள்கையை எங்களிடம் சேர்த்து வைப்பதற்கே தான் தப்லீகு – எட்டிவைப்பது என்று பெயர் வைத்திருக்கிறார். அவரின் நோக்கப்படி அவரின் இந்த இயக்கத்துக்கு 'தப்லீகு ஜமா அத்து -எட்டிவைக்கும் குழு' (அதாவது ஸுன்னத்து வல் ஜமாஅத்து மக்களிடம்; 'புதிய கொள்கையை எட்டிவைக்கும் குழு') என்று பெயர் வைத்தது சரி தான்.

**புதிய கொள்கை என்றால் என்ன?**

அந்த புதிய கொள்கையாகிறது தேவுபந்தியாக் கொள்கையாகும். அதாவது தானும் தனது முன்னோர் ஞானாசிரியர்கள் குருமார்களான றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி, முஹம்மது காசிம் நானுத்தவி முதலியவர்களும் மற்றவர்களும் சரியானது எனக் கண்ட அப்துல் வஹ்ஹாப் நஜ்தியின் கொள்கையேயாகும். (ஆனால் கொள்கையில் நஜ்தியையே பின்பற்றி இருந்தாலும் தொழுகை, நோன்பு போன்ற

அனுஷ்டானங்களில் இமாம்களை பின்பற்றி இருப்பதாக தங்களை ஹனபி என்று சொல்லிக் கொள்வதால் இவர்களுக்கு 'வஹ்ஹாபி முகல்லிது தேவுபந்தி' என்றும் இமாம்களைப் பின்பற்றாத 'வஹ்ஹாபிகளுக்கு வஹ்ஹாபி கைர முகல்லிது என்றும் சொல்லப்படுகின்றது) அந்தக் கெட்டக் கொள்கைகளைத் தான் அவரின் முன்னோர்கள் பிரச்சாரம் செய்து வந்தார்கள். அதையேதான் இல்யாஸும் தப்லீகு – எட்டி வைக்கிறார். அவர் சொல்வதை பாருங்கள்: 'ஒரு சமயம் இல்யாஸ் சொன்னார். ஹளரது மவுலானா தானவி மிகவும் பெரிய வேலையைச் செய்திருக்கிறார்கள். ஆகவே என்மனம் விரும்புகிறது போதனை அவர்களுடையதாகவும் தப்லீகின் முறை என்னுடையதாகவுமிருக்க வேண்டும். இந்தவிதத்தில் அவர்களின் போதனை (எங்கும்) பொதுவாக (பிரஸ்தாபமாக) ஆக வேண்டும்' (மல்பூளாது பக்கம் 47) இன்றும் அதே மல்பூளாது 57ம் பக்கத்தில் சொல்கிறார் 'ஹளரது தானவியுடைய ஆன்மாவுக்கு சந்தோசத்தை அதிகரிக்கச் செய்தவர்க்கு எல்லா வழிகளைவிட மேலானது ஸ்திரமானதுமான வழியாவது, ஹளரது (தானவி) உடைய உண்மையான போதனைகள் நேரான வழியின் பேரில் ஸ்திரமாக நிலைத்திருப்பதும், அவைகளை அதிகமதிகம் நாலா பக்கமும் பரவச்செய்வதற்காக முயற்சி செய்வதுமாகும்' இன்னும் மக்தூபாது 138ம் பக்கத்தில் இல்யாஸ் எழுதுகிறார், ' ஹலரது தானவியைக் கொண்டு பிரயோசனம் அடைவதற்கு அவர்களை நேசிப்பதும், அவர்களுடைய ஆள்களை கொண்டும் அவர்களின் கிதாபுகளைக் கொண்டும் பிரயோசனம் அடைவதும் அவசியமாகும். அவர்களின் கிதாபுகளைப் பார்ப்பதினால் அறிவுவரும்: அவர்களின் ஆள்களினால் அமல் வரும்' இன்னும் மல்பூளாது 114ம் பக்கத்தில் சொல்கிறார்;: ஹளரது றஷீது அஹ்மது கொங்கோஹி இக்காலத்தில் நேர்வழிகாட்டும் குத்பாகவும், முஜத்திதாகவுமிருக்கிறார்.

**வஹ்ஹாபிகள் என்றால் யார்?**

வஹ்ஹாபிகள் யார் என்று இல்யாஸின் பிரதான குருவும் ஆசிரியரும், அவரின் குத்புமாகிய றஷிது அஹமது கொங்கோஹியின் பதாவா றஷீதியா 235ம் பக்கத்தில் கேள்வி: 'வஹ்ஹாபிகள் என்பவர்கள் எவர்கள்? இப்னு அப்துல் வஹாப் நஜ்தியுடைய கொள்கையென்ன? அவர் எத்தகையை மனிதர்? நஜ்துகாரர்களுக்கும் ஸுன்னி ஹனபிகளுக்கும் (ஸுன்னி ஹனபி என்பது கொண்டு அவரின் கருத்து:தேவுபந்திகள்) கொள்கையில் வித்தியாசம் என்ன? பதில்: முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபைத் துடர்ந்த வரை வஹ்ஹாபியென்று சொல்வார்கள். அவரின் கொள்கைகள் நல்லது: அவரின் மதுஹபு ஹம்பாலியாகும்: நிச்சயாக அவரின் சுபாவத்தில் கடினமிருந்தது. அவரைத் துடர்தோரில் எவர்கள் கடினத்தில் எல்லை கடந்தோர்களோ அவர்களில் பஸாது (குழப்பம்) வந்தது. (இருந்தாலும்) எல்லோர்களும் கொள்கையில் ஒற்றுமையானவர்களேயாவார்கள். இவர்களுக்குள் செயலில் வித்தியாசம் ஹனபி, ஷாபியி, மாலிகி, ஹம்பலிக்குள்ளது போன்றதேயாகும்.' பாருங்கள்! றஷீது அஹ்மது கொங்கோஹி இப்னு அப்துல் வஹ்ஹாபைப் பின் பற்றியவர்களுக்கு வஹ்ஹாபியென்றும், மேலும் அந்த நஜ்தியின் கொள்கையை ஒப்புக் கொண்டு இமாம்களைத் தொடராத கைர முகல்லிது வஹ்ஹாபிகள் அவர்களில் கடினமான போக்கு இருந்த போதிலும், அவர்களுக்கும், செயலில் தங்களை ஹனபி என்று சொல்லிக் கொண்டு கொள்கையில் நஜ்தியின் கொள்கையுடைய முகல்லிது வஹ்ஹாபிகள் என்ற தேவுபந்திகளுக்குமிடையில், கொள்கையில்

வித்தியாசமில்லை. எல்லோர்களும் கொள்கையில் அப்துல் வஹ்ஹாப் நஜ்தியை தொடர்ந்த(வர்கள்) வஹ்ஹாபிகள் என்றும், சொல்வதோடு அந்த நஜ்தியின் கொள்கைகள் நல்லதெனச் சொல்லி அவரின் வாயினாலேயே தானும் வஹ்ஹாபி என்று ஒப்புக் கொள்கிறார். மேலும் இந்திய வஹ்ஹாபிகளின் தலைவர்; இஸ்மாயில் திஹ்லவியையும் றஷீது அஹ்மது கொங்கொஹி வாயார புகழ்கிறார். அவரின் பதாவா ரஷீதிய்யாவெனும் நூல் 42ம் பக்கத்தில் சொல்கிறார். அல்லாஹ்வின் அவுலியாக்கள் முத்தகீன்களேயல்லாது வேறுமில்லை என்ற திருமுறை வசனத்தின் பிரகாரம் மவுலவி இஸ்மாயில் திஹ்லவி வலியாக இருக்கும்.' இன்னும் இஸ்மாயில் திஹ்லவியால் எழுதப்பட்டதும் (தப்வியதுல் ஈமான்) ஈமானைப் போக்க கூடியது என்று சொல்வதற்குத் தகுந்த ஆபாசக் களஞ்சியமான தக்வியதுல் ஈமான் எனும் நூலையும் புகழ்ந்து அதிலுள்ள ஆபாசக் கொள்கைகளையும் சரிகண்டு ஏற்றுக் கொள்கிறார். பாதாவா றஷீதியா 41ம் பக்கத்தில் சொல்கிறார்: ' தக்வியதுல் ஈமான் எனும் நூல் மிகவும் விசேசமான உண்மையான நூலாகும். ஈமானை சரிபடுத்தக் கூடியதும் ஈமானுக்கு வலுவைக் கொடுக்கக் கூடியதுமாகும். குர்ஆன் ஹதீதுடைய கருத்து முழுவதும் அதிலிருக்கிறது. இன்னும் அந்த பதாவாறஷதீயா 42ம் பக்கத்தில் சொல்கிறார்: 'தக்வியதுல் ஈமான் எனும் நூல் மிகவும் நல்ல நூல்: ஷிற்கு பித்அத்தை தவிர்ப்பதற்கு நிகரில்லாதது: அதில் ஆதாரங்களெல்லாம் பூரணமாக அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும், ஹதீதுகளிலிருந்துமே காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலை வைத்திருப்பதும், அதைப்படிப்பதும் இன்னும் அதன்படி அமல்செய்வதும் (ஐனுல் இஸ்லாம்) இஸ்லாம் தானாகும் நன்மையும் கிடைக்கும். ஆதை வைத்திருப்பது குப்ரு என்று எவன் சொல்கிறானோ அவனே காபிர் அல்லது பாஸிக் பிதுஅத்துக்காறன்.' வலா ஹவ்ல வலாகுவ்வத இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீம். இன்னும் பதவா ரஷீதிய்யா 44ம் பக்கத்தில் சொல்கிறார். (ரஷீது அஹமது ஆகிய இந்த) அடிமையிடத்தில் அதிலுள்ள எல்லா மஸ்அலாக்களும் சரியானதேயாகும். இன்னும் தக்வியதுல் ஈமானின் எல்லா மஸ் அலாக்களைக் கொண்டும் அமல் செய்ய வேண்டும். நவூது வில்லாஹி மின்ஹா.

**வஹ்ஹாபிகளின் கொள்கை என்ன?**

வஹ்ஹாபிகளின் பிரதான நம்பிக்கையும் கொள்கையுமாகிறது. (1) அவர்கள் தங்களது கொள்கைக்கு மாற்றமான கொள்கையுடையவர்கெல்லாம் முஷ்ரிக்குகள், காபிர்கள் என்று சொல்வது, (2) அவர்கள் அல்லாஹ்வையும், ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களையும் குறைவாகவும் இழிவாகவும் ஏசுவது.

இதுபற்றி தேவுபந்தியாக்களின் பிற்கால ஷெய்குல் ஹிந்து ஹுஸைன் அஹ்மது மதனி தனது அஷ்ஷிஹாபுத்தாக்கிபு எனும் நூல் 43, 47-வது பக்கங்களில், அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பற்றி விளக்கிக் காட்டிவிட்டு, அவருடைய 1-வது, 4-வது கொள்கைகளை பற்றியும் எழுதுவதை இதோ பாருங்கள்.

அவர் சொல்கிறார்: அப்துல் வஹ்ஹாபு நஜ்ஜி ஹிஜ்ரி 13வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றினார். ஆவர் கெட்ட கொள்கையையும், கொண்டிருந்தார். ஸுன்னத்து வல்

ஜமாஅத்து மக்களை பலவந்தமாக அவரின் கொள்கைகளை ஒப்புக் கொள்ளும்படி நிர்பந்தித்து அவர்களோடு சண்டை செய்வதும், அவர்களுக்கு பலவகையான கஷ்டங்களையும், துன்பங்களையும் கொடுத்தார். அவர்களது பொருட்களை கொள்ளை பொருள் எனவும், அதை அகபரிப்பது ஹலால் எனவும், அவர்களை வெட்டுவது ஆண்டவனின் கிருபைக்கும் அவனிடம் நற்கூலி பெருவதற்கும் காரணமாகும் என்றும் கருதினார். குறிப்பாக, மக்கா மதீனாவாசிகளுக்கும், பொதுவாக ஹிஜாஸ் மக்களுக்கும் சொல்லொணாக் கஷ்டங்களைக் கொடுத்தார். ஸலபுஸ் ஸாலிஹூன்களான நேர்மை மிக்க ஸஹாபாக்கள் விஷயத்திலும், தாபியீன்கள் விஷயத்திலும் கடுமையான தூஷணமான, அவமானமான வார்த்தைகளை உபயோகித்தார். அவரின் கடுந்தொல்லைகளினால் அநேக ஜனங்கள் மக்கா, மதினாவை விட்டும் வெளியேற வேண்டியதாயிற்று. ஆயிரக்கணக்காண மக்கள் அவரது வாளினாலும், அவருடைய பட்டாளங்களின் வாளினாலும் ஷஹீதானார்கள். முடிவாக அவர் ஒரு அநியாயக்காரர், அழிச்சாட்டியக்காரர்கள், இரத்தவெறியார், கெட்ட மனிதராகும்.'

'முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபின் முதலாவது கொள்கை உலகிலுள்ள எல்லா மக்களும் எல்லா தேசத்திலுள்ள முஸ்லீம்களும் முஷ்ரிக்குகளாகவும், காபிர்களாகவுமிருக்கிறார்கள். அவர்களை வெட்டுவதும் ஹலால் ஆமானதாகும். மேலும் கடமையுமாகும்.

நான்காவது கொள்கை: வஹ்ஹாபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பேரில் கடுமையான தூஷணை வார்த்தைகளைச் சொல்கிறார்கள். தங்களை நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்குச் சமமானவர்கள் என்றும் கருதுகிறார்கள். அவர்களில் பெரியமனிதர்கள் சொல்கிறார்கள் எங்கள் கையிலிருக்கும் தடி எங்களுக்கு பிரயோசனம் கொடுக்கிறது. ஆதைக் கொண்டு நாயை விரட்டுகிறோம். றசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைக் கொண்டு அது கூட செய்ய முடியவில்லை'.

சகோதரர்களே! முக்கா முப்தி செய்யிது அஹ்மது ஜெய்னித் தஹ்லான் அவர்கள் தங்களின் 'அத்துரருஸ்ஸனிய்யா' எனும் நூலின் 46, 50-வது பக்கங்களில் 'அப்துல் வஹ்ஹாபு நஜ்ரி ஹிஜிரி 1206-ல் இறந்தார். அவரும் அவரைப் பின்பற்றிய வஹ்ஹாபிகளும் ஹிஜ்ரி 600க்குப் பிறகுள்ள முஸ்லிம்களை எல்லாம் காபிர்கள் என்று சொல்லுகிறார்கள்' என்பதாக எழுதியிருக்கிறார்கள்.

மௌலவி இல்யாஸ் ஹிஜிரி 1303-ல் பிறந்தார். ஆவர் 'தனது தப்லீக்கின் அசல் வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை. என்றைக்கு அசல் வேலை ஆரம்பமாகுதோ அன்றைக்கே எல்லா முஸ்லீம்களும் இன்றையிலிருந்து 700 வருஷங்களுக்கு முன்னுள்ள நிலைக்கு மீண்டுவிடுவார்கள்'. என்று தனது மல்பூஜாத் எனும் நூலின் 32-வது பக்கத்தில் சொல்கிறார்.

சகோதரர்களே, இந்த வாசகத்திலிருந்து இவரும் ஹிஜ்ரி 600-வது வருஷம் வரையிலுள்ளவர்கள் தான் முஸ்லீம்கள். அதற்குப் பின்புண்டான தனது காலம் வரையும் 700 கொச்சம் வருஷத்திலுள்ள முஸ்லீம்களெல்லாம் காபிருகள். அவர்களை எல்லாம்

மாற்றியமைப்பதற்காகதான் இந்த தப்லீகு இயக்கத்தை உண்டாக்கி இருக்கிறேன். ஆனால் ஆரம்ப வேலைகள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அசல் வேலை இன்னும் நடக்கவில்லை. அசல்வேலை நடந்தால், இவர்களெல்லாம் ஷிர்க்கு, குப்ரை விட்டும் நீங்கி, ஹிஜ்ரி 600 வருஷத்திலுள்ள மக்களைப் போல மூமின்களாக, முவஹ்ஹிதுகளாக மாறிவிடுவார்கள் என்றும் அவர் கருதுவதாக விளங்கவில்லையா? சிந்தித்து பாருங்கள்!

சகோதரர்களே! முகல்லிது வஹ்ஹாபிகளென்ற தேவுபந்திகளான மௌலவி இல்யாஸின் குருமார்கள் றசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏசுவதையும் சற்று சிந்தித்து பாருங்கள்.

மௌலவி இல்யாஸின் குருவும், ஞானசிரியரும் அவருடைய குத்புமான ரஷீது அஹ்மது கொங்கோஹியின் கலீபாவும் இல்யாஸின் இரண்டாவது ஞானசிரியருமான கலீல் அஹ்மது அம்பேட்டி தன்னுடைய பராஹீனே காத்தி ஆ என்றும் நூலின் 51-வது பக்கத்தில் சொல்கிறார். இந்த நூலை நல்லது என சரிகண்டு அதன் ஆசிரியரையும் வாயாரப் புகழ்ந்து அதில் ரஷீது அஹ்மது கையெர்பமிட்டிருக்கிறார். அதில் வருகிறது:- 'முடிவாக அவசியம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஷைத்தான், மலக்குல் மவுத்து இவர்களின் நிலமைகளைப் பார்த்துவிட்டு பூமி முழுவதையும் அறியக் கூடிய விசால அறிவு நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்களுக்கு இருப்பதாகத் தரிப்படுத்துவது ஷர்க்கு ஆகாமல் ஈமானின் எந்தப் பாகத்தைச் சேர்ந்ததாகும்! ஷைத்தானுக்கும், மலக்குல் மவுத்துக்கும் இப்படியான விசால அறிவு இருக்கிறது என்று குர்ஆன், ஹதீதின் ஆதாரத்தைக் கொண்டு தரிபட்டிருக்கிறது. நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்களுக்கு விசால அறிவு இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது. இப்படி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு விசால அறிவு இருக்கிறது என்பதானால் எல்லா ஆதாரங்களையும் மறுத்து ஒரு ஷிர்க்கை தரிப்படுத்துகிறான்.

இன்னும் தேவுபந்திகளின் ஹக்கிமுல் உம்மத் அஷ்ரபு அலி தானவி தனது ஹிபுளுல் ஈமான் எனும் நூல் 6வது பக்கத்தில் சொல்கிறார். நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரியும் என்று ஜெய்து என்பவன் சொல்வது உண்மைதான் என்றிருந்தால் அவனிடம் கேட்க வேண்டும், 'நீ நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரியும் என்று சொல்வது கொண்டு கருத்து சில மறைவான சங்கதிகள் என்றிருக்குமானால் அதில் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு என்ன விசேஷம் இருக்கிறது? அம்மாதிரியான மறைவான சங்கதிகளை பற்றிய அறிவு (அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தெரியக் கூடிய மறைவான சங்கதி போன்றதன் அறிவு) (சாதாரண மனிதர்களான) ஜெய்துக்கும், அம்ருக்கும் சிறுமதளைகளுக்கும், பைத்தியக்காரர்களுக்கும் தான் - ஏன் எல்லா ஜீவராசிகளுக்கும், மிருகங்களுக்கும் கூடதான் உண்டு.

சகோதரர்களே! நமது அருமைநாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பேரில் மவுலிது ஓதுவதைப் பற்றியும் இவர்கள் சொல்வதைச் சற்று கேளுங்கள்.

மௌலவி இல்யாஸின் குருவும் அவரின் குத்புமாகிய றஷீது அஹ்மது கொங்கோஹீ தனது பதாவா றஷீதிய்யாவில் சொல்கிறார்:- 'மவுலிது மஜ்லிசு நடத்துவது எந்த நிலைமையிலும் ஆகாத கருமமாகும். சுன்னத்தான கருமத்திற்கு அழைப்பு விலக்காகும்' (;பதாவா றஷீதிய்யா பக்கம் 136)

'மவுலிது சபையில் மார்க்கத்தில் விலக்கப்பட்ட எந்த கருமங்களும் இல்லாது போனாலும் அதில் ஏற்பாடுகளும், அழைப்பும் இருக்கத்தான் செய்கிறது. ஆனதால் இக்காலத்தில் அது கூடாது. அது போலவேதான் கந்தூரியும். (பதாவா ஹஷீதிய்யா பக்கம் 136)

எந்த கந்தூரியிலும், மவுலிது சபையிலும் கலந்து கொள்வதுவும் ஆகாது. எந்த விதமான கந்தூரியும், மவுலிதும் கூடாது.

(பவதாவா ஹஷீதிய்யா பக்கம் 147)

கேள்வி: மவுலிது சபையில் ஆதாரபூர்வமான சரித்திரங்களையே ஓதப்படுகிறது. எவ்விதமான ஆடம்பரமோ, பொய்யான கட்டுக் கதைகளோ யாதொன்றும் நடைபெறுவதில்லை. இம்மாதிரியான சபையில் கலந்து கொள்வது எப்படி? ஆகுமா, ஆகாதா? பதில்: ஆகாது வேறு காரணங்களுக்காக'.

(பதாவா றஷீதிய்யா பக்கம் 148)

இன்னும் இல்யாஸின் இரண்டாவது குரு கலீல் அஹ்மது அம்பேட்டியால் எழுதப்பட்டு, றஷீது அஹ்மதுவால் சரிகண்டு கையொப்பமிடப்பட்டதுமான பறாஹீனேகாத்திஆ எனும் நூலில் வருகிறது.

'இப்படி ஒவ்வொருநாளும் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸலம்) பிறந்த சரிதையை (மவுலிதை) ஓதி வருவதானது ஹிந்துக்கள் ஒவ்வொரு வருஷமும்; ஸாங்கு கன்யா பிறப்பு கொண்டாடி வருவதற்கு ஒப்பாகும். அல்லது றாபிளிக்கள் அஹ்லேபைத்துக்களின் ஷஹாதத்தை ஒவ்வொரு வருஷமும் எடுத்துரைத்துக் கொண்டிருப்பதற்கு ஒப்பாகும். மஆதல்லாஹ்! - அல்லாஹ்தான் காப்பாற்ற வேண்டும். எம்பெருமானார் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புனிதமான பிறப்பை ஸான்கு, கன்யா பிறப்பிற்கு ஒப்பாக்கி விட்டார்கள். இந்த கெட்ட வேலை தன்னிலேயே பழிக்கப்பட்டதும் ஹறாமானதும், ஆகாத வேலையுமாகும். மேலும் இந்த ஜனங்கள் அந்தக் கூட்டத்தார்களை விடவும் மேலே போய்விட்டார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் தான் செய்கிறார்கள். இவர்களிடத்திலே எவ்வித கட்டுப்பாடுமில்லை நினைத்த சமயமெல்லாம் இந்த வீணான வேலையைச் செய்கிறார்கள்.' (பறாஹீனே காத்திஆ பக்கம் 148)

சகோதரர்களே! இவர்களெல்லாம் இம்மாதிரி குப்ரிய்யத்தான வார்த்தைகளைத் தங்களது நூற்களில் எழுதியதனால் இவர்களும் இவர்களை சரிக்கண்டவர்களும் காபிர், முர்த்தத்துக்கள் என்று மக்கா, மதீனாவிலுள்ள முப்பத்திமூன்று உலமாக்களின் கையொப்பமுடன் 'ஹஸாமுல் ஹறமைன்' எனும் ஒரு பத்வா கிதாபு ஹிஜ்ரி 1324-ல் வெளிவந்தது. பின்னர் இந்தியாவில் பஞ்சாப், வங்காளம், மதறால், பலுஜிஸ்தான், எல்லைப்புறம். குஜராத்து, காத்தியாவாறு முதலிய தேசத்திலுள்ள 268 உலமாக்களின் கையொப்பங்களுடன் 'அஸ்ஸவாரி முல் ஹிந்திய்யா' என்ற பெயரோடு ஒரு பத்வாக்கிதாபு ஹிஜ்ரி 1345-ல் வெளிவந்தது.

ஹுஸாமுல்; ஹறமைன் என்ற பத்வா கிதாபின் ஒரு பத்வா சுருக்கம் வறுமாறு:- ஹம்து ஸலவாத்து ஸலாமுக்குப் பின்பு சொல்கிறேன். இந்த ஸுவாலில் சொல்லப்பட்ட கூட்டத்தார்களான குலாம் அஹ்மது காதியானி, ரஷீது அஹ்மது அவரைப் போன்ற ஏனையவர்களும் காபிர்கள் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. மேலும், இவர்கள் காபிர்கள் என்பதில் சந்தேகிக்கின்றவன் - ஏன் - இவர்கள் காபிர்கள் என்பதில் எந்த வகையிலாயினும் தயக்கம் கொண்டவனுங்கூட காபிர் என்பதில் சந்தேகமில்லை. இவர்களில் சிலர் பரிசுத்த மார்க்கத்தை அப்படியே முதுகுக்குப் புறமாக வீசிவிட்டார்கள். சிலர் மார்க்கத்தில் முக்கியமானதும் எல்லா முஸ்லீம்களாலும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளப்பட்டதுமான சங்கதிகளையும் மறுக்கிறார்கள். அல்லாஹ் அவர்களை சபிப்பானாகவும் நரகத்தை அவர்களது ஒதுங்குந்தலமாக ஆக்குவானாக.

இப்படிக்கு – செய்யிது இஸ்மாயில் இபுனு செய்யிது கலீல்.

**தேவுபந்திகள் எல்லோர்களுக்கும் கோள்கை ஒன்றேயாகும்**

இதுபற்றி தேவுபந்தியர்களின் பிற்கால தலைவர் செய்குல் ஹிந்து ஹுஸைன் அஹ்மது மதனி (அஜூதாயாபாதி) தனது அஷ்ஷிஹா புத்தாகிபு எனும் நூல் 41-ம் பக்கத்தில் சொல்கிறார். பாருங்கள் 'முடிவான வார்த்தை ((முஹம்மத் காஸிம் நாணுத்தவி, ரஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலிதானவி ஆகிய இந்த எல்லா முதியோர்களும் ஒரு ஆன்மாவும் பல ஸ்தூலங்களையும் போலும் ஒரு கருத்து பல பதங்களையும் போன்றவர்கள். இவர்களின் கொள்கைகளும் ஒன்றே. இவர்களின் சீடர்கள், அபிமானிகள், மாணவர்கள் எல்லோர்களும் ஒரே கொள்கையுடைவர்களே'.

**இயக்கத்தில்தானே சேர்ந்திருக்கிறோம் என்று சொல்வது சரிதானா?**

'நாங்கள் தப்லீகு ஜமாஅத்தில் சேர்ந்து சேவைதானே செய்கிறோம். தொழுகைக்குதானே அழைக்கின்றோம். ஸ்தாபகர் வஹ்ஹாபியாகவோ, யாராகவோ இருக்கட்டும். நாங்கள் வஹ்ஹாபிய்யக் கொள்கையை பின்பற்றவில்லையே. இலங்கை தப்லீக்கில் வஹ்ஹாபிக் கொள்கை இல்லையே' என்று சொல்வதாகிறது சுத்த தவறாகும். முன் ஒரு சமயம் காக்ஸாரி இயக்கத்தில் சேர்ந்தவர்களும் இதேபோல் ' நாங்கள் காக்ஸார் இயக்கத்தில் தான் சேர்ந்திருக்கிறோமேயல்லாது அதன் ஸ்தாபகர் மஷ்றூகியைப் பற்றியோ அவரின் கொள்கையைப் பற்றியோ எங்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை' என்று சொன்னார்கள். அது

சமயம் வஹ்ஹாபிஸத்தின் வேறொரு பிரசாரி மவுதூதிசாகிபு காக்ஸாரிகளின் இந்த எண்ணம் தவறு என்று கண்டித்து அவரின் 'காக்ஸார் இயக்கம்: என்ற நூலில் சொல்கிற அவரின் வாசகத்தை பாருங்கள் 'நாங்கள் சிப்பாய்களாக பயிற்சி பெற வேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம்: பட்டாளத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் எங்கள் குறிக்கோள். லீடருடைய கொள்கையை பற்றி கவனிப்பது எங்கள் வேலையல்ல என்று சொல்வதானது முழுக்க வீணான பேச்சாகும். இதை ஒரு புத்திசாலியும் ஒரு கணப் பொழுதுங் கூட ஏற்கவே மாட்டான். நீங்கள் ஒரு இயக்கத்தில் சேர்கிறதும் அதே நேரத்தில் அதன் லீடரின் குணப்பாட்டைப் பெறாதிருப்பதுவும் சாத்தியமானதில்லை. லீடரின் ரூஹு பூரணமாக இயக்கத்திற்கு ரூஹாயிருக்கும். இயக்கத்தில் சேர்ந்தவர்களிலெல்லாம் அது தானாகவே ஊடுருவிப் பாய்ந்து வேலை செய்யவே செய்யும். ஏந்த மனிதனும் அதைக் கொண்டு குணபாடு பெறாதிருக்கவே முடியாது.

பார்த்தீகளா மவுதூதி சாகிபு சொல்வதை! ஆகவே 'தப்லீகு இயக்கத்தில் சேர்ந்திருக்கிறோம் தொழுகைக்கு அழைப்பது தானே எங்கள் நோக்கம் என்று சொல்வது சுத்த தவறாகும். தொழுகைக்கு அழைப்பதுதான் கருத்து என்றால் அதற்கு தப்லீகு எட்டி வைப்பது என்று சொல்வது சரியல்லவே! ஆகவே, தப்லீகு என்ற பெயரை மாற்றி வஹ்ஹாபி இல்யாஸின் தொடர்பை நீக்கிவிட்டு வேறே உங்களுக்கு இஷ்டமான பெயர் வைத்துக் கொண்டு ஜனங்களைத் தொழுகைக்கு அழையுங்கள். எவ்வித தோசமும் வராது.

**தப்லீகு ஜமா அத்தில் சேரலாமா? அது பற்றி மார்க்க தீர்ப்பு என்ன?**

இதுவரையில் கூறப்பட்டவைகளையெல்லாம் கவனமாகப் படித்து பார்த்தவர்கள் எல்லோர்களுக்கும் தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகர் யார்? அவரின் கொள்கை என்ன? என்ன நோக்கத்திற்காக இந்த இயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்? என்பது எவ்வித சந்தேகத்திற்குமிடமின்றி பட்டவர்த்தனமாகத் தெரியவரும். இந்த இயக்கத்தின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பது இல்லை. மக்களை வழிகெட்ட பித்அத்துகாரர்களான (நூதனக் கொள்கைக்காரர்களான) வஹ்ஹாபிகளாக ஆக்குகிறது தான் என்று ஸ்தாபகர் இல்யாஸ் தனது வாயினாலேயே சத்தியம் செய்து சொல்லும் போது, இந்த நோக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் போது இந்த இயக்கத்தில் சேரலாமா? ஒரு போதும் சேரவே கூடாது. இந்த அக்கிரமக்காரர்கள் அநியாக்காரர்கள் கிட்டவும் கூட போகவேகூடாது அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு சொல்கிறான்: 'அநியாயஞ் செய்பவர்கள்பால் நீங்கள் சார்ந்து இருக்காதீர்கள். (அவ்வாறாயின்) நரக நெருப்பு உங்களை பற்றிக் கொள்ளும் (அல்குர் ஆன் 11.113)ஒருவர் பக்கம் சார்ந்திருப்பதானது, அவரோடு அன்பாகவும் அன்னியோன்னியமாகவும் இருப்பதுவேயாகும். அருமை நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் சொல்கிறார்கள்: 'கெட்ட கொள்கைக்காரர்களை சங்கை செய்வதற்காக அவர்களோடு நடப்பவன் நிச்சயமாக மார்க்கத்தை உடைத்து தகர்த்து போடுவதற்கு உதவி செய்து வருகிறான்;.' (அல்-ஹதீது தபறானி) 'அவர்களை கெட்ட கொள்கைக்காரர்களைச்) சந்திப்பீர்களேயானால் அவர்களுக்கு ஸலாம் சொல்லாதீர்கள்' (இப்னுமாஜா) 'அவர்கள் வியாதியஸ்தர்களாக இருந்தால் நோய் விசாரிக்கப்போகாதீர்கள்.

அவர்கள் மரணித்து விட்டால் அவர்களுடைய ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளாதீர்கள்' (அபுதாவுது)

ஹகாயிகு தன்ஸீல் என்னும் கிதாபில் ஸஹல் இப்னு அப்துல்லா ஹித்துஸ்தரி (றலியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தொட்டும் ரிவாயத்து செய்யப் படுவதாக செய்துனா ஷாஹ் அப்துல் அஜீது முஹத்திதுத்; திஹ்லவி (கத்தஸல்லல்லாஹு ஸிற்றஹு அஜீஸ்) அவர்;கள் தங்களின் தப்ஸீர் அஜீஜியில் சொல்கிறார்கள்: 'ஈமான் தரிபட்டிருக்கவும், தவுஹீது கலப்பற்றதாhக இருக்கவும் விரும்பிகிறவர் பித்அத்துக்காரர் (கெட்ட கொள்கைக்காரர்)களோடு மனமருவுதலாக இருக்கவோ, அவர்களோடு கூடிப் புசிக்கவோ, குடிக்கவோ மாட்டான். அவர்களோடு தனது வெறுப்பைக் காட்டியே நடப்பான். எவனாகிலும் கெட்ட கொள்கைக்காரர்களோடு இன்புற பேசி ஒப்பி நடப்பானேயானால் அல்லாஹ் அவனை விட்டும் ஈமானுடைய இன்பத்தை உரிந்து விடுவான். எவனாகிலும் பித்அத்துக்காரர்களை உகந்து நேசிப்பானேயானல், அவனுடைய இருதயத்தை (கலப்பை) விட்டும் ஈமானுடைய ஒளியைப் பிடுங்கப்பட்டு விடும்.'

செய்குனா முஹியத்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி (குத்திஸஸிற்றுஹு) அவர்கள் தங்களின் குன்யதுத் தாலிபீன் என்ற கிதாபில் எழுகிறார்கள்: புளைல் இப்னு இயாள் (றலியல்லாஹு அன்ஹு)அவர்கள் சொல்கிறார்கள்: எவனாகிலும் பித் அத்துக்காரனோடு உகந்து நேசித்தால் அல்லாஹுத்த ஆலா அவனுடைய (நல்ல) அமல்களை அழித்து விடுவான். அவனுடைய கல்பை விட்டும் ஈமானுடைய பிரகாசத்தைப் போக்கப்பட்டுவிடும். எவனாகிலும் பித்அத்துக்காரனோடு கோபமாக இருக்கிறதாக அல்லாஹ் அறிந்தால் அவனுக்கு நல்ல அமல்கள் இருந்த போதிலும் அல்லாஹீத் ஆலா அனுடைய பாவங்களையெல்லாம் பொறுத்து விடுவான் என்றே நான் ஆதரவு வைக்கிறேன். பித் அத்துக்காரன் ஒருபாதையில் போகக் காண்பாயேயானால் நீ வேறோரு பாதையில் போ'

சகோதரரர்களே மேலே கூறப்பட்டுள்ள போதனைகளை நன்றாய் சிந்தித்;துப் பார்த்து தீய கூட்டத்தினரின் உறவையும் பந்தத்தையும் அகற்றி, நல்லோர்களான நம் ஸுன்னத்து வல் ஜமாத்தார்களுடனேயே சேர்ந்து நடப்பீர்களாக! அல்;லாஹ் நம் அனைவர்களையும் கெட்ட கொள்கைக்காரர்களின் தீங்கை விட்டும் காப்பாற்றுவானாக. ஆமீன்.

**அறிவிப்பு**

1. காயல்பட்டணம் ஹிஸ்புல்லாஹ் ஸபையினரால் வெளியிட்ட நூற்களின் எப்பகுதியையும் யாரும் காயல்பட்டணம் ஹிஸ்புல்லாஹ் ஸபையின் முன் அனுமதி பெறாமல் எடுத்தாளக் கூடாது.

2. குழப்பங்களும், வழி கேடுகளும் நிறைந்து போய்விட்டுள்ள இக்காலத்தில், உண்மையான மார்க்கத்தை போதிக்கும் ஸுன்னத் ஜமாஅத்துடைய நூற்களை வாங்கி தம் பெற்றோரின் ஈஸால் தவாபுக்காக இலவசமாக வாங்கி விநியோகித்து நிரந்தரமான நன்மையை பெறலாம்.

எனவே எமது வெளியீடுகளை வாங்கி நன்மை பெறும் நோக்கத்துடன் இலவசமாக விநியோகிக்க விரும்புவோர் எம்மோடு தொடர்பு கொள்க.

## விவேகமில்லா விவாத மாநாடு வீணாண தீர்ப்புகளும்

இலங்கை மாத்தறை கோட்டைக்ரை ஜூஆம் பள்ளியில் 8.8.65 காலை 10 மணியளவில் நடைபெற்ற தப்லீக் ஜமாஅத் விவாத மாநாட்டில் நடந்த உண்மை நிலையை தப்(பு)லீக் ஜமா அத்தினர்கள் தங்களுக்கு சாதகமாக தப்பும் தவறாக திருத்தி கள்ளத்தனமாக கையெழுத்து வாங்கி வெளியிட்டுள்ளதற்கு மறுப்பாக வெளியிடப்பட்டதின் மறுபதிப்பு

**விவேகமில்லா விவாத மாநாடும் வீணான தீர்ப்புகளும்**

'தப்லீக் ஜமா அத்து விவாத மாநாடு மாத்தறை' என்ற றோட்டீஸைப் பார்த்தோம். அதில் மாத்தறையில் நடந்த தப்லீக் விவாத மாநாட்டின் நடவடிக்கைகளை தப்பும் தவறுமாக எழுதி வீணான தீர்ப்புகளும் எடுதப்பட்டிருக்கிறது. மாநாட்டுக்கு நாங்களும் போய் கடைசிவரை இருந்து கவனித்து வந்திருக்கிறோம். மாநாட்டு நடவடிக்கைகளை டேப் ரெக்கோடும் எடுக்கப்பட்டிருக்கிறது.

'தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கிய இல்யாஸ் காந்திலவி வஹ்ஹாபி. அவர் வஹ்ஹாபியத்தை பரப்புவதற்காகவே தான் இந்த இயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்.' என்ற வாதியின் விவாதத்தைப் பரிசீலினை செய்வதற்காகவேதான் மாநாடு நடத்தப்பட்டது.

**பிரதிவாதி தரப்பினர்:** இல்யாஸின் உஸ்தாதுமார்கள் வஹ்ஹாபிகளா இரந்ததினால் இல்யாஸ் வஹ்ஹாபியாகி விடுவாரா? ஆவரால் உண்டாக்கப்பட்ட இயக்கத்தில் சேரக்கூடாதா?, அலியுல் ஜூபாயி வஹ்ஹாபி மு.:.தஜலியாக இருந்தும், அவரின் மாணவர் அபுல்ஹஸன் அஷ்அரியுடைய கொள்கையை ஸுன்னத்து வல்ஜமாஅத்து மக்கள் பின் பற்றியிருக்கிறார்களில்லையா? என்றார்.

**வாதிதரப்பார்:** இமாம் அஷ்அரி அவர்கள் வஹ்ஹாபி ஜுபாயிடம் படிக்கத்தான் செய்தார்கள். அவரைத் தனது குருவாக ஏற்று அவர் கொள்கையை சரி காணவில்லை. அவரின் கொள்கை சரியில்லை என்று சொன்னார்கள். (துஹ்பதுல் முரீது 62-ம் பக்கம் பார்க்க) இல்யாஸ் வஹ்ஹாபிகளிடத்தில் படித்தார். அவர்களை நல்லவர்கள் என்று அவர்களின் கொள்கையை சரிகண்டு, அவர்களை தனக்கு குருவாக்கி, அவர்களிடம் முரீதானார். அவர்களை வலி, குபுது என்றும் சொன்னார்கள். அவர்களைப் பின்பற்றினார். வஹ்ஹாபியைப் பின்பற்றிய இவரும் வஹ்ஹாபி. அவரின் குரமார்கள் றஹூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைத் திட்டி, ஏசி அவர்களின் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். அந்த நூல்களெல்லாம் இதோ எங்களிடமும் இருக்கிறது இப்படி எழுதியதினால் அவர்களை காபிர்கள் என்றும் அவர்களைக் காபிர்கள் என்று சொல்ல சந்தேகித்தவனும் காபிர் என்றும் உலமாக்கள்

பத்வா கொடுக்கிறார்கள். அந்த பத்வா கிதாபுக்கு' **ஹுஸாமுல் ஹறமைன்'** என்று பெயர் அதுவும் இதோ எங்களிடமிருக்கிறது என்றார்.

**பிரதிவாதி தரப்பினர்:** மக்கா, மதீனாவிலுள்ள உலமாக்களேதான் அவர்களை முஸ்லீம்கள், நல்லவர்கள் என்றும் பத்வா கொடுக்கிறார்களே என்று, கலீல் அஹ்மது அம்பேட்டியால் எழுதப்பட 'அல்முஹன்னது' என்ற பத்வா கிதாபுலிருந்து செய்கு முஹம்மது ஸாது பாபஸீல் அவர்கள் எழுதியதாக காட்டப்பட்ட பத்வாவை வாசித்துக் காட்டச் சொல்லி வாசிக்கப்பட்டது.

**வாதி தரப்பினர்:** இது கள்ள பத்வா. கலீல் அஹ்மது அவரே சுவாலும், ஜவாபும் எழுதி, அப்படியானால் நீங்கள் நல்லவர்கள், முஸ்லீம்கள் என்றும் அவரே எழுதி, இந்தியா, தேவுபந்தி உலமாக்களின் கையொப்பங்களுடன் மக்கா, மதினாவிலுள்ள உலமாக்களுடைய கையெழுத்துக்களென்று அவரே கற்பனையாக எழுதி வைத்திருக்கிறார் என்றார்.

**பிரதிவாதி தரப்பினர்:** இல்யாஸ் வஹ்ஹாபியோ காபிரோ ஆகட்டும். அவர் மவுத்தாகி விட்டார். இலங்கையில் நடக்கிற தப்லீக் வஹ்ஹாபியத்து இருக்கிறதாவென்று கேட்டார்.

**வாதி தரப்பினர்:** அதைப் பற்றி இங்கு பிரச்சனை இல்லை. தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கினது வஹ்ஹாபியத்தை பரப்புவதற்காகத்தான் என்றானால,; அது எங்கு நடந்தாலும் வஹ்ஹாபியத்து பரவத்தான்; செய்யும் என்றார்.

**பிரதிவாதி தரப்பினர்:** நேரமாகிவிட்டது. மாநாட்டை முடித்துவிடுங்கள் என்றும், 'மக்கள் முடிவு சொல்லிவிட்டும் போங்கள்' என்றும் கூச்சல் போட்டுக் கொண்டுமிருக்க, முடித்துவிட்டு ஆளுக்கொரு பக்கமாக ஓடிவிட்டார்கள்.

'மாநாட்டில் தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கிய இல்யாஸ் வஹ்ஹாபி. வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காகவே தான் இந்த இயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்.' என்ற வாதியின் விவாதத்தை பிரதிவாதி தரப்பினர் ஒப்புக்கொண்டு விட்டார்கள். இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இருக்கிறதா? என்று கேட்க, அதைபற்றி இங்கு பிரச்சனை இல்லை என்று வாதி சொல்லிவிட்டார். இதுதான் மாநாட்டில் நடந்தது.

'தப்லீக் ஜமா அத்து விவாத மாநாடு மாத்தறை என்ற நோட்டீஸில் வாதியிடம் 'இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இருக்கிறதா'? என்று கேட்கப்பட்டதற்கு, வாதிதரப்பார் பதில் சொல்லவில்லையென்று தவறாக எழுதிக் கொண்டு, அதனால் 'இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை. அதில் எல்லா மக்களும் சேர வேண்டும் என்று தீர்ப்புக் கூறியிருப்பதாகிறது, இவன் கள்ளன். களவெடுக்கும் நோக்கத்திலேயே வந்திருக்கிறான் என்று வாதிப்பவருடைய விவாதத்தை பரிசீலினை செய்வதாக மாநாடு கூடி, வாதியிடம் 'இவன் என் வீட்டில் களவெடுத்திருக்கிறானா'? என்று கேட்டோம். 'அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை' என்று சொல்லி, ஆகையினால் 'கள்ளனோடு அண்டிப் பழகுங்கள், சேர்ந்து இருங்கள்'' என்று தீர்ப்புக் கூறுவது போலாகிறது. இது விவேகமான தீர்ப்பா? அல்லது வீணான தீர்ப்பா? கள்ளன்

தானா? களவெடுக்கும் நோக்கத்தோடு தானா வந்திருக்கிறான் என்பதைப் பரிசீலனை பண்ண சபை கூடினீர்களா? அல்லது உங்கள் வீட்டில் களவெடுக்கும் நோக்கத்திற்காகத் தான் வந்திருக்கிறான் என்றானால், உங்கள் வீட்டில் இப்போது களவாடாதிருந்த போதிலும் எப்போதாவது களவெடுக்கத்தானே செய்வான். நோக்கத்திற்குப் புறம்பானதைப் பற்றி தீர்ப்புக் கூறுவது நேர்மையான தீர்ப்பாகுமா?

மாநாட்டில் இமாம் அஷ்அரி அவர்களின் உஸ்தாது யார்? என்று கேட்டதற்கு, வஹ்ஹாபி அலியுல் ஜுபாயி என்று சொல்லப்பட்டிருக்க, நோட்டீஸில் அஷ் அரி இமாம் அவர்களுடைய செய்கு யார்? என்று கேட்டதற்கு ஜுபாயி வஹ்ஹாபி என்று சொன்னதாகவும் எழுதி இருக்கிறது. (அஸ்தஃபிறுல்லாஹ்) எங்கள் இமாம் அஷ் அரி (றஹ்மத்துல்லாஹி) அவர்கள் ஜுபாயி வஹ்ஹாபியுடைய கொள்கையை நல்லதென்று சரிகண்டு அவரிடம் முரீதாகி, அவரையா தங்களுக்கு செய்தாக (குருவாக) ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்? இப்படித்தானா இமாம் அவர்களைப் பற்றி நீங்கள் நம்பி இருக்கிறீர்கள்? இப்படித்தானா மாநாட்டில் கேட்கப்பட்;டது? ஏன் இப்படி இமாம் அவர்கள் பேரில் பொய் சொல்கிறீர்கள்.

நோட்டீஸில் 3 நீதிபதிகளும் தீர்ப்புக் கொடுத்ததாக எழுதி இருக்கிறது. இது சுத்தப் பொய்யாகும். நீதிபதிகளில் ஒருவரான மவுலவி பாஜில் முஹம்மது கவுஸ் பாகவி அவர்கள் தாங்கள் அப்படி தீர்ப்புக் கொடுக்கவில்லை என்றும் தனது ஒப்பத்தை புளொக் செய்து கள்ளத்தனமாக தீர்ப்பில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது: அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சொல்லி தாங்கள் சபைத் தலைவருக்கு ஏற்கனவே ரிஜிஸ்டரில் அனுப்பி வைத்திருக்கிற தங்களின் தீர்ப்பின் நகலையும் தந்தார்கள். அதையும், அவர்கள் ஸூபி ஹஜரத் அவர்களுக்கு எழுதிய தபாலையும் இதனுடன் இணைத்திருக்கிறோம்.

மேலும் தீர்ப்பில் ஸுபி ஹஜரத் அவர்களை வீண் துஷ்பிரசாரம் செய்யாது விட்டுவிடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும் எழுதியிருக்கிறது. ஸூபி ஹஜரத் அவர்கள் துஷ்பிரசாரம் செய்கிறார்களா? அல்லது ஆலிம், மவுலவி, பாஜில்;, அதிபர், ஜேபீ என்று வைத்துக் கொண்ட தப்லீக் அபிமானிகளா? ஸூபி ஹஜரத் அவர்கள் நம் ஸுன்னத்து வல் ஜமாஅத்து மக்களில் வஹ்ஹாபியத்து பரவி, மக்களிடையில் குழப்பம் உண்டாகக் கூடாது என்று, இப்போது வந்திருக்கிற தப்லீக் ஜமாஅத்து என்ற இயக்கம் வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காக வந்திருக்கிறது. அதன் ஸ்தாபகரும், அவரின் குருமார்களும் வஹ்ஹாபிகள். அவர்களின் கெட்ட வஹ்ஹாபிக் கொள்கைகளை அவர்களின் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். றஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை இப்லீஸை விடவும் அறிவில் குறைந்தவாகள். அவர்களுக்கு தெரிகிற அறிவைப் போல் பேயன், பைத்தியக்காரன், மதளை மிருகங்களுக்கும் கூடத்; தெரியும்; என்றும்;, அவர்கள் ஒர் அற்ப அணுவுக்குங் கூடத் சமமாக மாட்டார்கள். செம்மானை விடவும் குறைந்தவர்கள், அவர்களின் நினைப்பு வருகிறதானது, கழுதை மாட்டுடைய நினைப்பில் மூழ்குவதை விடவும் கெட்டது என்றும், அவர்கள் மவுத்தாக்கி மண்ணோடு மண்ணாகி விட்டார்கள், அவர்கள் தேவுபந்தி உலமாக்களிடத்தில் உருதுப் பாஷை கற்ற மாணவர் என்றும், இன்னும் பலவாறக ஏசிதிட்டி, அவர்களின் இன்னின்ன

நூல்களில் இன்னின்ன விதமாக எழுதி இருக்கிறார்கள் என்று அவர் எழுதிய நூலின் பக்க நம்பர் வாசகத்தோடு எடுத்துக்காட்டி, அவர்களின் சீடர் இந்த இயக்கத்தின் ஸ்தாபகர் இல்யாஸ், அவர்களை எல்லாம் தனக்கு குருமார்களென்று ஏற்றுக்கொண்டு அவர்களை வலி, குதுபு என்றும் இன்னின்ன நூல்களில் சொல்லியிருக்கிறார். அவரின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பதில்லை என்று சத்தியம் செய்து சொல்லி, அவரின் நோக்கம் அவரின் குருமார்களுடைய வஹ்ஹாபிக் கொள்கையை பரப்புவதுதான் என்றும் அவர் வாயாலேயே சொல்கிறார். ஆகையால் இந்த இயக்கத்தில் சேராதீர்கள். சேர்ந்தால் உங்களுடைய ஈமானுக்கு ஆபத்து உண்டாகும். குறைந்தது அதன் ஸ்தாபகர் இல்யாஸையும் அவரின் குருமார்களான கொங்கோஹி, தானவி, அம்பேட்டி, நானுத்தவி இவர்களையெல்லாம் முஸ்லிம்கள், நல்ல மனிதர்கள் என்றாவது மனதில் நம்பிக்கை வரும். இவர்களையெல்லாம் றஸூலல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏசியவர்கள். றஸூலல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏசியவன் காபிர். அவனை காபிர் என்று சொல்ல சந்தேகித்தவனும், தயக்கம் கொண்டவனும், காபிராவான் எனறால் அவனை முஸ்லிம், நல்ல மனிதன் என்று சொன்னவன் யாராகும்? ஆகையால் அதில் சேராதீர்கள் என்று பிரச்சாரம் செய்து கொண்டேயிருக்கிறார்கள்;;. அவர்களின் பிரச்சாரத்தினால் அநேக மக்கள் அந்த இயக்கத்தின் மர்மத்தைத் தெரிந்து அதை விட்டும் நீங்கி விட்டார்கள். அவர்களின் தளராத பிரசாரமில்லாதிருந்தால் இன்று முழு இலங்கையிலும் வஹ்ஹாபியத்து பரந்து இருக்கும்.

நீங்கள் மவுலவி, பாஜில், அதிபர், ஜேபீ, இன்னும் என்னென்னமோ பெயர்களுள்ள பெரியார்களாக இருந்தும், ஸூபி ஹஜரத்தால் இல்யாஸ், அவரின் குருமார்களைப் பற்றி எழுதிக் காட்டிய குற்றச்சாட்டுகளில் ஒன்றையாவது இல்லையென்று மறுக்க முடிந்ததா? (உள்ளதை எப்படி மறுக்கவோ, மறைக்கவோ முடியும்) மக்கள் எப்படி கெட்டுக் போனாலும் சரி. நாம் பிடித்ததை விடக்கூடாது என்ற பிடிவாதத்தோடு எப்படி வேண்டுமாகிலும் சொல்லத் தயங்குகிறீர்களில்லை. இலங்கை தப்லீகில் வஹ்ஹாபித்து இல்லை. கொழும்பு தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை என்று எப்படியாவது சாக்குபோக்கு சொல்லி குழப்பிவிட்டு மக்களை வழிகேட்டில் இழுபட வைக்காதிர்கள். நீங்கள் றஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய அனந்தரக்காரர்கள் என்று சொல்கிறீர்கள். றஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸலம்) அவர்களை ஏசியவனுடைய இயக்கத்தில் மக்களை சேரும்படி சொல்கிறீர்களே, உங்களுக்கு உரோசமில்லையா? உங்கள் தாய், தகப்பன், உறவினர்களை ஏசியவனோடு யாரையாவது அண்டிப் பழக சொல்வீர்களா? இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை சேருங்;கள் என்று சொல்கிறீர்களே! இலங்கை தப்லீக் வேறு, இல்யாஸ் தப்லீக் வேறேயா? இல்யாஸ் தப்லீக்கைத்தானே செய்கிறோம் என்றும் சொல்கிறீர்கள். இலங்கை தப்லீக் வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காக உள்ளதில்லை தொழுகைக்கு கூப்பிடுவதும் ஏவல,; விலக்கல் செய்வதும் தான் இதன் நோக்கம் என்றால் இதற்கு 'தப்லீக்' என்ற பெயர் தான் சொல்லலாமா? வஹ்ஹாபிக் கொள்கையை அது எட்டாத ஸுன்னத்து ஜமாஅத்து மக்களிடத்தில் அதை எட்டி வைப்பதற்காகவல்லவா இல்யாஸ் 'தப்லீக் ஜமாஅத்து' என்று பெயர் வைத்து இருக்கிறார்? தொழுகைக்கு கூப்பிடுவதற்கு 'தொழுகைக்கு

அழைப்பது' என்றல்லவா சொல்ல வேண்டும?. எட்டிவைப்பது என்றா சொல்வது? மாத்தறை மாநாட்டில் எத்தனை பேர்கள் இல்யாஸுக்கு 'றஹ்மத்துல்லாஹ்' என்று சொன்னார்கள்? தெரியாதவர்கள்தானா சொன்னார்கள்? மவுலவிகளுந்தானே சொன்னார்கள். றஹ்மத்துல்லாஹ் என்று முஸ்லிமுக்கல்லவா சொல்வது! இல்யாஸீக்கு றஹ்மத்துல்லாஹ் என்று சொனனால் அவரை முஸ்லிமென்று ஒப்புக்கொண்டதாகிறது. றஸூலுல்லாஹ்வை (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸலம்)ஏசியவன் காபிர், அவனை காபிர் என்று எல்லா உலமாக்களும் சொல்லி இருக்கிறார்கள். ஏன்? நீங்களும் தான் இந்த மாநாட்டில் சொன்னீர்கள் . அப்படியானால் றஸூலுல்லாஹ்வை ஏசியவனை ஒலி, குதுபு என்று சொன்னவன் யார்? அவனை முஸ்லிம் என அவனுக்கு 'றஹமத்துல்லாஹ்' என்று சொன்னவர்கள் எப்படியாவார்கள்? (நவுதுபில்லாஹி மின்ஹா) தவுபா செய்யுங்கள்! அம்பேட்டியின் 'அல்முஹன்னது' என்ற கற்பனை பத்வாவில் இல்யாஸின் குருமார்களை அவர்கள் றஸூலுல்லாஹி (ஸல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை திட்டி ஏசி எழுதினால் அவர்களைக் காபிர்கள் என்று பத்வா கொடுத்த அதே உலமாக்கள், அவர்களையெல்லாம் முஸ்லிம்கள், நல்லவர்கள் என்று பத்வா கொடுத்திருப்பதாக சொல்வதை நம்பாதீர்கள். இது சுத்தப் பொய்யான கற்பனையான பத்வாவாகும். ஒருவரைக் காபிர் என்று சொல்வது இலேசான காரியமில்லை. மரணத் தண்டனைத் தீர்ப்புக் கொடுப்பதை விடவும் கடினமானது. பொறுப்பில்லாது சும்மா இலேசாகத் தீர்ப்புக் கூறிவிட முடியாது. சரியான காரணமில்லாது ஒருமுஸ்லிமை காபிர் என்று பத்வா கொடுத்தால,; கொடுத்தவன் காபிராகி விடுவான். மக்கா, மதீனாவிலுள்ள பெரும் உலமாக்களும், முப்திமார்களுமாக 35 பேர்களும், இந்தியாவில் பல பாகங்களிமுள்ள 268 உலமாக்களும் சரியான காரணமில்லாது

பொறுப்பில்லாமல் ஒருவர் பேரில் குப்ரு பத்வா கொடுப்பார்களா? அவர்கள் என்ன காரணத்தைப் பொறுத்து இல்யாஸின் குருமார்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்தார்களோ, அதே காரணங்களான குப்ரியத்தான வாசகங்கள் அவர்களின் கிதாபுகளில் அச்சாகி உலகமெல்லாம் வெளியாகி இருக்கும் போது காபிர்களென பத்வா கொடுத்த அதே உலமாக்கள், திரும்ப காபிர்களல்லை உண்மையான முஸ்லீகள் என்று பத்வா கொடுப்பார்களா? ஒரு போதும் அப்படிச் செய்யவே மாட்டார்கள். அல்முஹன்னது என்ற பத்வா சுத்தப் பொய்யான கற்பனை. அதைப் பற்றி ' அல்முஹன்னதின் அண்டப்புழு' என்ற நாமத்தோடு ஒரு கட்டுரை சீக்கிரமாக வெளிவரும். இந்த மாத்தறை மாநாட்டில் இல்யாஸுக்கு '**றஹ்மதுல்லாஹ்**' என்று சொன்னது, இலங்கை தப்லீகிலுள்ளவர்களும் அதன் அபிமானிகளும் தானா? அல்லது வேறெங்குமுள்ளவர்களா?

ஆகவே, நம் ஸுன்னத்து ஜமாஅத்து சகோதரர்களை வேண்டிக் கொள்கிறோம். நீங்கள் இந்த இயக்கத்தில் சேராதீர்கள். இந்த இயக்கத்தில் சேர்ந்தால் நம்மிடமிருந்து திருடப்படத்தான் செய்யும். எதை? பொருளையல்ல: எங்கிலும் பொருளிலும், உயிரிலும் பிரதானமாகிய ஈமானை. ஏன்? திருடுதல் என்றால் தெரியாத படி எடுப்பது தானே? இந்த இயக்கத்தில் சேர்ந்தால் நமக்குத் தெரியாமல் நமது ஈமான் பறிக்கப்படத் தானே செய்யும். ஏன் றஸூலுல்லாஹ்(ஸல்லலல்லாஹி அலைஹி வஸல்லம்) அவர்களுடைய உகப்பு பறிக்கப்பட்டுத் தானே போகும். ஈமான்

பறிக்கப்பட்டுத்தானே போகும். ஆகையால் நீங்கள் இதில் அறவே சேராதீர்கள். அல்லாஹ் உங்களுக்கும் எங்களுக்கும் றஹ்மத்து செய்வானாக. ஆமீன்.

**1 . ஏ.ஸீ.எம். கலீல்**

இக்பாலிஸ்டான், தர்கா டவுண்

**2. மவுலவி எம்.ஏ.எம் நஈம்,**

கஹட்டோவிட்ட, ருக்கஹவில

**3. எம்.ஏ.ஆமிர்**

9 சக்வீதி லேன், கொழும்பு 5

**4. ஏ.எச்.எம்.முகம்மது,**

54/1 கிறிப்ஸ் றோட், காலி,

**5. ஏ.எச்.எம் ஹுஸைன்,**

23/1 கட்டுக்கொடை, காலி

**6. பி.எம்.ஷாஹுல் ஹமீது,**

6/1 றிச்மன் ஹில்ரோட், காலி

**7.அல்ஹாஜ் எம்.ஏ.எம் நிலாம்,**

30, விவேகானந்த ரோட், கொழும்பு 6

**8. எம்.ஜ.எ.ரஹ்மான்,**

புதிய தெரு,வலிகாமம்.

**9. எம்.எல்.ஏ.ரஹீம்,**

கொடப்பிட்டிய, அக்குறஸ்ஸ.

**10.ஏ.எம். ஸஹீத்,**

மதுரகொட, வலிகாமம்.

786

MOULAVI FAZIL

A. L. M. GHOUSE [BAKAVI]

COLOMBO-10

DATE 10th August 1965.

[illegible]

2

786

MOULAVI FAZIL

A. L. M. GHOUSE [BAKAVI]

(2)

COLOMBO-10


DATE ____________ 19

[illegible]

A.L.M. Ghouse Bakavi

10. 8. 65

www.sufimanzil.org



3

786

MOULAVI FAZIL,

A. L. M. GHOUSE [BAKAVI]

COLOMBO-10

DATE 20th August 19[illegible]

786

MOULAVI FAZIL,

A. L. M. GHOUSE [BAKAVI]

(2)

COLOMBO-10

DATE ........19

786 5.

MOULAVI FAZIL,

**A. L. M. GHOUSE [BAKAVI]**

(3)

2, Badriya Lane,
101/1 Panchikawatte Road
COLOMBO-10

DATE ........................ 19

[illegible]

A.L.M. Ghouse Bakavi
20.8.65

---

786 6.

MOULAVI FAZIL,

**A. L. M. GHOUSE [BAKAVI]**

2, Badriya Lane,
101/1 Panchikawatte Road
COLOMBO-10

DATE 23.8.1965

M. N. M. Liyaudeen Alim [illegible]

A.L.M. Ghouse Bakavi
22.8.65